முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1136

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.11.2022, செவ்வாய்கிழமை

1. முழுமதி பூஜை கண்ட அரங்கனே
முழுமை ஞானம் தந்தருளும் ஞானதேசிகனே
வலுவான தர்மபலம் கூட்டி
வையகத்தில் தர்மவான்களை நிரப்பி
2. நிரப்பி உலகமாற்றம் செய்ய
ஞானியாக வந்த ஆறுமுக அரங்கனே
வரம் தந்து சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
3. ஆசியதும் சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 22 ம் நாள் 08.11.2022 செவ்வாய்கிழமை)
அரங்கனுக்கு முழுமதி நன்னாளில் உரைப்பேன்
வரமென அரங்கன் ஞானம் வளர உயர
வையகம் எங்கும் பரவி உலகமாற்றம் நிகழ
4. பெருமைபட ஆறுமுகன் என் அருளும் தயவும் ஆசியும் உண்டுஉண்டு
பிரணவக்குடில் கொண்டே உலகமெங்கும்
உலகமெங்கும் ஓங்கார ஞானத்தை
உயர்வாக ஆறுமுகன் யான் அரங்கன் வழி நிறைவேற்றுவேன்
5. அன்னதனால் அரங்கன் தொடர்பு கொண்டு அகிலத்தார் ஞானம் பயில
அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு கிட்டி
தடையற உலகம் ஞான ஆட்சி
தவராஜனை ஏற்ற மக்களைக் கொண்டே அமையக்கூடும்
6. கூடவே அற்புதத்தை அரங்கனை கொண்டு நடத்துவேன்
குடிலை நோக்கி உலக மக்கள் வர
நாடெங்கிலும் மாற்றம் சடுதி கண்டு
ஞானசித்தர் காலம் ஞானிகள் ஆட்சிகாலமாக இனிதே மாற்றம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–